# Sub Court, Eraniel

**O.S. No.11/2022**
**Date:** 19.11.2024.
வா.சா.1 - திரு. அசிலர்

(சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
1, 3 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை, 4ம் பிரதிவாதி தரப்பில் Adopt செய்யப்படுகிறது).

6 முதல் 9ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ளது போல எனது மனைவிக்கு உரிமைப்பட்ட நுள்ளிவிளை பி வில்லேஜ் றீ சர்வே எண்.871/8 ல் உள்ள சொத்து சம்மந்தமாகத் தான் மரிய செபஸ்தினுக்கும் எனக்கும் பிரச்சனை என்றால், சரியல்ல. மரிய செபஸ்தியனுக்கும் எனக்கும் சொத்து சம்மந்தமாக எந்த பிரச்சனையும் இல்லை. எனக்கும் இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகளாகிய அரசு அதிகாரிகளுக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்றால், சரிதான். இந்த வழக்கில் நான் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்தானது எனது மனைவி சகாய ஆனிபாலா என்பவரின் பெயரில் உள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கில் எனது மனைவி சகாய ஆனிபாலா மற்றும் மரிய செபஸ்தியன் ஆகிய இருவரும் தரப்பினர்களாக இல்லை என்றால், சரிதான். எனது உரிமைப்பட்ட சொத்திற்கு இடைஞ்சல் செய்ததாக நான் புகார் கொடுத்ததாக, ஆவணங்கள் எதையும் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து சம்மந்தமாக அசல் வழக்கு எண்.167/2021 நிலுவையில் உள்ளது என்றால், சரியல்ல. அது எனது மனைவிக்கு சாதகமாக முடிந்து விட்டது. அந்த தீர்ப்பு எந்த தேதியில் பிறப்பிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. அவ்வாறு தீர்ப்பு என் மனைவிக்கு சாதகமாக அமைந்தது என்பதை காட்டுவதற்கு அந்த தீர்ப்பை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில், அதனை மரிய செபஸ்தியானுக்கு வழக்கறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால் இந்த வழக்கில் மரிய செபஸ்தியானை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கின் 6, 8 மற்றும்9 ஆகிய பிரதிவாதிகளுக்கு நான் அந்த வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பவில்லை என்றால், சரிதான். 6 முதல் 9 வரை உள்ள பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றாலும், அவர்கள் உயரதிகாரிகள் என்ற காரணத்தினால் மட்டுமே அவர்களை கட்சி சேர்த்திருக்கிறேன் என்றாலும்,

சரிதான். எனவே 6 முதல் 9 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றால், சரியல்ல. பொதுவாக பாதிக்கப்பட்ட நபர், தான் பாதிக்கப்பட்டதாக காவல் நிலையத்திலோ, காவல் துறை உயரதிகாரிகளுக்கோ புகார் மனு கொடுத்தால், அதைப்பற்றி விசாரிக்க வேண்டியது காவல் துறையினரின் கடமை என்ற விபரம் எனக்குத் தெரியும். இந்த வழக்கில் நான் கூறியுள்ள சொத்து சம்மந்தமாக உள்ள புகாரின் அடிப்படையில் எந்த நபரின் மீதும், வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான். காவல்துறை அதிகாரிகள் விசாரித்து, இது உரிமையியல் பிரச்சனை என்பதால் சிவில் நீதிமன்றம் மூலம் நிவாரணம் தேடிக்கொள்ள எனக்கு அறிவுறுத்தப்பட்டது என்றால், சரியல்ல. இந்த புகாரை விசாரித்த அதிகாரிகள் சட்ட ஒழுங்குப் பிரச்சனை வந்துவிடக் கூடாது என்று அவர்களுடைய கடமையைத் தான் செய்தார்கள் என்றால், சரியல்ல. எனக்கும் மரிய செபஸ்தியானின் குடும்பத்திற்கும் இடையே உள்ள பிரச்சனை சம்மந்தமாக உள்ள விஷயத்திற்கு, நேர்மையான அரசு அதிகாரிகளுக்கு கஷ்டப்படுத்த வேண்டும் என்று அவர்களின் மீது பொய்யான விபரங்களைச் சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.